கொண்டது. இதைச் சுற்றிலும் அருகாமையில் இருக்கின்ற 35 கிலோமீட்டர் தொலைவில் ஒரு மேல்நிலைப் பள்ளியும், அதேபோல பசும்பலூர் என்ற ஊரில் 10 கிலோமீட்டர் தொலைவில் ஒரு உயர்நிலைப் பள்ளியும், 15 கிலோமீட்டர் உள்ள கைகலத்தூரில் ஒரு உயர்நிலைப் பள்ளியும், 20 கிலோமீட்டர் உள்ள வாலிகண்டபுரத்தில் ஒரு உயர்நிலைப் பள்ளியும், 18 கிலோமீட்டர் தொலைவிலுள்ள வேப்பன்தட்டையில் ஒரு உயர்நிலைப் பள்ளியும் இருக்கிறது. எனவே, ஏறத்தாழ 20 கிராம சுற்றளவிலே இங்கே மேல்நிலைப் பள்ளி இல்லை. எனவே, திருக்கோவில் நிர்வாகத்தின் திருவாசகம், நான் தினமும் பூஜிக்கும் சுப்ரபாதம், தமிழகத்தினுடைய நிரந்தர முதல்வர் புரட்சித் தலைவியின் ஆட்சியில் வருகின்ற கல்வி ஆண்டிலே இந்த உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக ஆக்கித் தருவார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அருகிலே இருக்கின்ற லப்பைகுடிகாடு அரசு உயர்நிலைப் பள்ளியை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மறந்துவிட்டார்கள் என்று கருதுகிறேன். 2,233 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டாலும்கூட பகுதி-2 திட்டத்திலே எந்த அளவிற்கு நிதி ஒதுக்கப்படுகிறதோ அந்த அடிப்படையிலேதான் பள்ளிகளை மேம்படுத்த முடியும். கருத்துரு வந்திருக்கிறது. மேல்மட்டக் குழு பரிசீலிக்கும். விதிமுறைகளின் அடிப்படையில் இதைப்பற்றி அரசு முடிவு செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 176, திரு. ஆர்.பி. பரமசிவம், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர்.

176—

குப்பை சேகரிப்போர் கூட்டுறவுச் சங்கம் ஏற்படுத்துதல்

***23704**—திரு. ஆர். பி. பரமசிவம்:

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் குப்பைப் பொருட்கள் சேகரிப்போருக்கு போதுமான விலை கிடைக்கப் பெறாமையால் குப்பைப் பொருள் சேகரிப்போர் கூட்டுறவுச் சங்கம் ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கா.ப. பட்டாபிராமன், கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குப்பைக் கூளம் சேகரிப்போர் ஒன்று சேர்ந்து தங்களுக்கு என தனியாக ஒரு சங்கம் பதிவு செய்ய முன்வந்தால் அந்த முன்மொழிவை ஏற்று அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும்.

திரு. ஆர். பி. பரமசிவம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் முதல் குரலே பிச்சைக்காரன் குரல்தானா என்று திரைப்பட பராசக்தியை வாய்ஜாலத்தில் மட்டும் வஞ்சக நெஞ்சம் கொண்டவர்கள் காலத்தில் நாம் காண முடிந்தது. ஆனால், இன்று பாடுபடுகின்ற வர்க்கம், படித்தவர்கள், பண்பாளர்கள் பாராட்டுகின்ற வகையில், பாராளுகின்ற பராசக்தியாக விளங்கும் எங்கள் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியின் காலத்தில், கூட்டுறவே நாட்டுயர்வு என்ற தத்துவத்தோடு, கூடிவாழ்ந்தால் கோடி நன்மை என்ற அடிப்படையில் செயல்பட்டு, பாரத தேசமே பாராட்டி பரிசுகள் பல பெற்ற இந்த நிலையில், பஞ்சையாய், பராரியாய், பாதுகாப்பற்ற நிலையில், சென்னையில் குப்பைப் பொருள்களைச் சேகரிப்போருக்கு போதுமான விலை கிடைக்கப் பெறாமலே குப்பைப்பொருள் சேகரிக்கும் அந்த நபர்களுக்கு கூட்டுறவுச் சங்கம் அமைக்க அரசு மீண்டும் பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா.ப. பட்டாபிராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குப்பைச் சேகரிப்போர் சங்கம் என்கின்ற சங்கம் அமைப்பதற்கு அரசாங்கம் தன்னிச்சையாக எந்த நடவடிக்கையும் எடுக்க முடியாது. குப்பைச் சேகரிப்போர் ஒன்று சேர்ந்து 25 நபர்கள் உறுப்பினர்களாக ஆக வேண்டும். ஒரு படிவத்தைப் பூர்த்தி செய்து, அதிலே உறுப்பினர்கள் ஆவதற்கு என்னென்ன தகுதிகள் வேண்டுமோ அவை எல்லாம் இருக்குமானால் அவர்கள் கொடுக்கின்ற அந்த மனுவினை ஏற்று அரசு அப்படிப்பட்ட சங்கம் ஒன்றை உருவாக்கிக் கொள்ள அனுமதிக்கும். சென்னை போன்ற பெரிய நகரங்களிலே குப்பைகளைச் சேகரிப்பது மாநகராட்சியினுடைய பணி. ஆகவே, இவர்களுக்கு வேலை வாய்ப்பு இருக்குமா என்பது வேறு. சங்கம் கழிவுப் பொருள்களைச் சேகரிப்பது என்பது வேறு. கழிவுத் தாள்களை சேகரிப்பது என்பது வேறு. பொதுவாக, சென்னை போன்ற நகரங்களில் காலையில் எழுந்தால் பத்திரிகைகாரர்கள் வந்து வீடுகளிலே பத்திரிகைகளைப் போடுவதற்கு முன்னாலே கழிவுத் தாள்களைச் சேகரிப்போர் வந்து அந்தந்த குப்பைத் தொட்டிகளிலிருந்து கழிவுத் தாள்களைச் சேகரித்துக்கொள்கிறார்கள். அவர்களுக்கு என்று சென்னையிலே, கழிவுத் தாள் சேகரிப்போர் கூட்டுறவுச் சங்கம் என்கின்ற ஒரு சங்கம் மண்ணடியிலே இயங்கிக்

1995 மார்ச் 30]

கொண்டிருக்கிறது. ஆனால், குப்பைப் பொருள்களை என்று சொல்கின்றபோது எந்தப் பொருள்களை நினைத்து இந்தக் கேள்வியை தொடுத்திருக்கிறார் என்று புரியவில்லை. குப்பைப் பொருள் என்று சொன்னால், குப்பைகளிலே பாட்டில்கள் இருக்கும், பிளாஸ்டிக், தேவையற்ற பொருள் இருக்கும். பால்பைகள் போன்ற வீசி எறியப்படுகின்ற அந்தப் பொருள்கள் இருக்கும், இவர்களுக்கு தனித் தனியாக சங்கம் அமைக்க வேண்டுமென்று சொல்கிறாரா, அல்லது எல்லாக் குப்பைகளும் சேர்த்து தேவையில்லாத குப்பைகளும் சேர்த்து சங்கம் அமைக்க வேண்டுமென்று சொல்லுகிறாரா? எதை என்று சொல்லவில்லை. அதுமட்டுமல்ல. பெரிய பெரிய மருத்துவமனைகளிலேகூட தேவையற்ற பொருள்களை அழிப்பதற்காக Incinerator என்கின்ற ஒரு இயந்திரத்தையே வைத்து அதன்மூலமாக சுகாதார அடிப்படையில், விஞ்ஞான ரீதியிலே அந்தக் கழிவுப் பொருள்களை எல்லாம் அழித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆக இன்றைக்கு 25 நபர்கள் கொண்டு ஒரு படிவத்தைத் தருவார்களானால், அதில் அவர்கள் கொடுக்கிற சட்ட திட்டங்கள்—எப்படி அந்தத் தொழிலிலே ஈடுபட வேண்டுமென்ற அந்தக் கருத்துக்களை எல்லாம் 'பை-லா'சில் கொடுப்பார்களானால், இந்த அரசு அந்த மனுவை ஏற்கும். பொதுவாக புரட்சித்தலைவி அவர்களுடைய ஆட்சிக்காலத்திலே ஊர் ஓரத்தில் ஒதுக்கப்பட்ட எத்தனை எத்தனையோ அரசியலிலே உள்ளவர்களை எல்லாம் ஒன்று சேர்த்திருக்கிற இந்தக் காலகட்டத்தில் இந்த அரசு நிச்சயமாக குப்பைகளையும் ஒன்று சேர்த்து, அதற்கு ஒரு வழிவகை செய்யத் தயங்காது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10.40

திரு. ஆர். பி. பரமசிவம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உண்ண உணவின்றி, உடுக்க உடையின்றி, மழையிலேயும், வெய்யிலிலேயும் அலைந்து, பாடுபட்டு, அந்தப் பொருள்களைச் சேர்க்கிறார்கள் சிறார்கள். குப்பைகள் என்றால் பிளாஸ்டிக், பிளாஸ்டிக் பைகள், பழைய செருப்பு, கண்ணாடி—இது போன்ற பல பொருள்களைச் சேர்க்கும் அந்தச் சிறார்களுக்குப் போதுமான ஊதியம் கிடைப்பதில்லை. அந்தப் பொருள்களை வாங்கும் வியாபாரிகள் குறிப்பாக சில வட நாட்டவர்கள், குஜராத் மாநிலத்தைச் சேர்ந்த வணிகர்கள் அந்தப் பொருள்களை வாங்குகிறார்கள். அவர்கள் மிகவும் படு அடியாக, குறைந்த விலைக்கு, அடிமட்ட விலைக்கு வாங்குகிறார்கள். இதனால் அந்தச் சிறார்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். மேலும் இந்தச் சங்கத்தை எப்படி அமைப்பது என்றே தெரியாத சூழ்நிலையில் வாழ்கிறார்கள் அந்தச் சிறார்கள். அவர்களாக முன்வந்து சங்கத்தை அமைத்துக் கொடுங்கள் என்று

அரசைக் கேட்க முடியாது, கேட்கத் தெரியாது. ஆகவே அரசே பரீட்சார்த்த முறையிலே குப்பைப் பொருள்களைச் சேகரிப்பவர்களை ஒன்று சேர்த்து, சங்கம் அமைக்க முன்வர வேண்டும் அல்லது தொண்டு நிறுவனங்கள் மூலம் அவர்களை எஜுகேட் பண்ணி, அவர்கள் மூலமாக அந்தச் சங்கத்தை அமைக்க முன்வர வேண்டும். அல்லது, தமிழகத்தில், அதுவும் குறிப்பாக இதுபோன்ற குப்பைகளைச் சேர்க்கும் சிறார்களுக்கு சமூக நலத்துறை மூலம் ஒரு புகலிடம் இருக்கிறது. அந்தப் புகலிடத்தில் அந்தச் சங்கத்தை அமைக்க அமைச்சரவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா.ப. பட்டாபிராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்லுகின்றபோது "சிறார்கள்" "சிறார்கள்" என்று சொல்லிக்கொண்டிருந்தார்கள். சிறார்கள் ஒன்று சேர்ந்து ஒரு கூட்டுறவுச் சங்கத்தை அமைக்க முடியாது. 1983-ஆம் வருட கூட்டுறவுச் சங்கச் சட்டத்தின்படி 18 வயதுக்கு மேற்பட்டவர்கள்தான் கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்கள் ஆக முடியும். அந்த 18 வயதைக்கூட எந்த அடிப்படையிலே கொண்டு வந்தார்கள் என்றால், இந்தியன் கான்ட்ராக்ட் ஆக்ட்—இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் அடிப்படையிலே 18 வயது என்று உருவாக்கி இருக்கிறார்கள். ஆகவே சிறார்கள் சேர்ந்து கூட்டுறவுச் சங்கங்களை உருவாக்க முடியாது. கழிவுப் பொருள்களைச் சேகரிப்பது அல்லது குப்பைகளைச் சேகரிப்பது என்பது ஒரு கலை. யார் யாருக்கு எந்தப் பொருள் தேவையோ அந்தப் பொருளைத்தான் கழிவுப் பொருள்களிலே இருந்து, குப்பைகளிலே இருந்து சேகரிப்பார்கள். அதனால் தான் பாரதியார் கூட " சந்தி பெருக்கும் சாத்திரம்" என்று பாடினார். சந்தி பெருக்குவதே, சாத்திரம்—இட் ஈஸ் எ சையன்ஸ். கூட்டுறவுத் துறையில் அவர்கள் முன் வந்து மனுக்கள் கொடுப்பார்களானால், அரசு அதை ஏற்று ஆவன செய்யும். மேலும் இந்தக் கூட்டுறவுச் சங்கத்தை உருவாக்குவதற்கு அவர்களுக்கு உதவி தேவை என்றால், கூட்டுறவுத் துறையிலே இருக்கின்ற அதிகாரிகளைப் பார்த்தால், அவர்கள் அதற்குத் தேவையான ஆலோசனைகளைப் பெற முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை.

டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறையின் மூலம் குப்பைகளிலிருந்து மின் உற்பத்தி செய்யும் திட்டத்தை அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

1995 மார்ச் 30]

மாண்புமிகு திரு. கா. ப. பட்டாபிராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குப்பைகளிலே இருந்து மின்சாரத்தை உற்பத்தி செய்வது என்கிற திட்டம் தமிழக அரசிலே இருக்கிறது என்பதை இன்றைக்கு எல்லோரும் அறிவார்கள். குப்பைகளிலேகூட, எரிகின்ற பொருள்களை எல்லாம் ஒன்று சேர்த்து, அவைகளுக்கு என்று தனியாக பர்னர் வைத்து, அதன்மூலமாக அனல் மின்சாரத்தை உருவாக்க வேண்டுமென்று இன்றைக்கு டிக்கோ நிறுவனம் முயற்சித்துக் கொண்டிருக்கிறது. அதற்கான அடிப்படை வேலைகள் அத்தனையும் துவங்கப்பட்டிருக்கின்றன என்று கருதுகிறேன். அப்படிப்பட்ட திட்டம் தமிழக அரசிடம் இருக்கிறது. (குறுக்கீடு) மாநகராட்சியிடம் இருக்கிறதென்று மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். ஆக அந்தத் திட்டம் இன்றைக்குத் தமிழக அரசிடம் இருக்கிறதென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. தாமரைக்கனி.

முற்பகல் 10.45

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகரத்தில் குப்பைப் பொருட்களைச் சேகரிப்பது ஒரு கலை என்று மாண்புமிகு அமைச்சர் சொல்வதைக் கேட்டு நான் மிகுந்த சந்தோஷப்படுகிறேன். இந்த சென்னை மாநகரம் மட்டுமல்லாமல், பேரூராட்சி, நகராட்சிகள் போன்ற பகுதிகளிலும் கூட்டுறவுச் சங்கங்கள் அமைப்பதற்கு அரசு ஊக்குவிக்குமா? உங்களுடைய மத்திய கூட்டுறவு வங்கிகளில் இருந்து, அந்தக் குப்பைகளை அள்ள லோன் கொடுக்க ஆவன செய்வீர்களா? அதுமட்டுமல்லாமல், இந்தக் குப்பைகளை அள்ளுவதற்கு ஒட்டுமொத்தமாக தமிழ்நாட்டில் குப்பை அள்ளுவோர் சங்கம் அமைத்து ஏதாவது ஒரு வாரியம் அமைப்பதற்குக் கோரிக்கை வந்தால் அதையும் நீங்கள் பரிசீலனை செய்வீர்களா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. ப. பட்டாபிராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதைத்தான் நான் ஏற்கெனவே சொன்னேன். கூட்டுறவுத் துறையின் மூலமாக அவர்கள் சங்கம் அமைக்க வேண்டுமென்றால், அந்த உறுப்பினர்கள் சேர்ந்து முன்வர வேண்டுமென்று சொன்னேன். ஆகவே அதற்கான பதிலை நான் ஏற்கெனவே அளித்துவிட்டேன். கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக இப்படிப்பட்ட குப்பைச் சேகரிக்கின்ற சங்கங்கள் தமிழகத்திலே மாவட்டங்களில் உருவாக்கவேண்டுமென்று சொல்கிறார்கள். அதற்கும் நான் ஏற்கெனவே

பதிலை அளித்திருக்கிறேன். இன்றைக்கு மாவட்டங்கள் தோறும் அமைத்து, பொதுவாக ஒரு வாரியம் அமைக்க வேண்டுமென்று சொன்னார்கள். உள்ளாட்சித்துறை, மாநகராட்சிகள் அதுபோன்ற துறைகளின் மூலமாக இந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் உருவாக்கப்பட்டு, அந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கின்ற தொழிலாளர்கள், அந்தந்த மாநகராட்சிகளிலும், உள்ளாட்சிகளிலும் அவர்களுக்கு என்று ஒரு கூட்டுறவுச் சங்கத்தை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்குத் தேவையான உதவிகளை எல்லாம் மத்திய கூட்டுறவு வங்கிகள் மூலமாகக் கடன் மற்றும் சில வசதிகள் இன்றும் தரப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 177, திரு., வி. கே. லட்சுமணன், இருக்கையில் இல்லை. திரு.கே.பி. ராஜு, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

177—

அங்கீகரிக்கப்படாத மனைக்கட்டுகள் வளர்வதைத் தடுத்தல்

***9506**—திரு. வி. கே. லட்சுமணன் :*

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அங்கீகரிக்கப்படாத மனைக் கட்டுகள் வளர்வதைத் தடுக்க அந்த மனைக்கட்டுகளில் வாங்கப்படும் காலி இடங்களும், வீடுகளும் விற்பனைக்கு வந்தால் அவைகளைப் பதிவு செய்யக்கூடாது என்று சார்பதிவாளர்களுக்கு அரசு உத்தரவிடுமா?

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மனைப் பிரிவுகள் விற்பனை சம்பந்தப்பட்ட ஆவணங்கள் பதிவு செய்வதற்குமுன் சார்பதிவாளர் சம்பந்தப்பட்ட ஊராட்சி, பேரூராட்சி, நகராட்சி மற்றும் மாநகராட்சி மன்றங்களுக்கு ஏதேனும் ஆட்சேபனை உள்ளதா என அறிவிப்பு கொடுத்து 45 நாட்களுக்குள் பதில் பெறப்பட்டு பின்னர் ஆவணங்களைப் பதிவு செய்யுமாறு அரசு ஆணை (நிலை) எண் 542, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 29-4-1986-ல் தக்க அறிவுரைகள் சார் பதிவாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. இருப்பினும், மேற்படி அரசாணையை நிரூபணம் செய்யும் பொருட்டு, சென்னை உயர்நீதிமன்றம் தடை விதித்துள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS